**அக்டோபர்: 16**

**4 வது வார்த்தை - எல்லாம் முடிந்தது.**

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார், அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும், ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார், என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். ஏசாயா 53:4-8
அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது, அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள்.
இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார். யோவான் 19:28-30





இன்றைய தியானத்தில் பழைய ஏற்பாட்டில் ஒரு பகுதியும், புதிய ஏற்பாட்டில் ஒரு பகுதியும் எடுத்துள்ளோம். ஏனெனில் நம் ஆண்டவர் "எல்லாம் முடிந்தது" என சொன்னதில் அநேக தீர்கதரிசனங்கள் நிறைவேறியதை பார்க்கப்போகிறோம். இந்த 6 வது வார்த்தையில் மனுகுலத்திற்கும் பிதாவாகிய தேவனுக்கும் இடையே இருந்த ஒரு பெரிய பாவக்கணக்கு முடிந்தது என்பதை ஆண்டவர் சொன்னார். மனுக்குலத்தின் மேல் வரவிருந்த கோபாக்கினையை சிலுவையிலே நம் இரட்சகர் தீர்த்து வைத்தார். மிகமுக்கியமாக நமக்கும் பிதாவிற்கும் இடையே இருந்த மிக பெரிய பிரவினையை, சிலுவையில் கடைசி நிமிஷத்தில் நம் நேசர் இயேசு தமக்கும் பிதாவிற்கும் இடையே ஏற்படுத்திய பிரிவினால் உடைத்து நம்மை இணைத்தார். இன்னும் ஒரு முக்கியமானது, மனுகுலத்தின் மேல் இனி சாத்தான் ஆதிக்கம் செய்ய முடியாதபடி, தம்முடைய கீழ்படிதலினாலே முடித்தார். அவர் தம்மையே சிலுவையில் கிருபாதார பலியாக ஒப்புகொடுத்ததால், பாவம் நம்மை இனி மேற்கொள்ள மாட்டாது. ஆகவே பாவத்திற்கு மரித்தவர்களாக இருந்த நம்மை, அவருடைய மரணத்தை விசுவாசிப்பதால் உயிர்பித்து அவருடைய பிள்ளைகளாக வாழைத்தார். அல்லேலூயா. .....!

பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். ரோமர் 6:23

**ஜெபம்**
மஹா பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, உங்க பரிசுத்தபிள்ளை இயேசு கிறிஸ்துவை அனுப்பி என் பாவகணக்குகளை முடித்ததற்காக நன்றி. இனி அவருக்காக, பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தில் வாழ கிருபை தாரும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

# இயேசு உனக்காக மரித்தார்

